# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கத்

# தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டம்

---

[1981, மார்ச்சு மாதம் 5 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1981, *மார்ச்சு மாதம்* 13 ஆம் *தேதிய* இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் *வர்த்தமானப் பத்திரிகையின்* II ஆம் *பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 65 | தபாற் செலவு : சதம் 50

# 1981 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கத் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டம்

[1981, மார்ச்சு மாதம் 5 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 44/80

"தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம்" என்றழைக்கப்படும் நிதியமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம் 1981 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கத் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல்.**

2. (1) "தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம்" என அழைக்கப்பட வேண்டிய நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; இது இதனகத்துப்பின்னர் " நிதியம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2) இந்த நிதியம், (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவாதல் வேண்டும் என்பதோடு, இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டிருத்தலும் வேண்டும். அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

**நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.**

3. (1) நிதியத்தின் நிருவாகம், முகாமை, கட்டுப்பாடு என்பன இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அமைக்கப்படும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை (இது இதனகத்துப் பின்னர் " சபை " எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அமைச்சரினது அமைச்சின் செயலாளர் ;

(ஆ) சுகாதாரத் திணைக்களத்தினது சுகாதார சேவைப் பணிப்பாளர் ;

(இ) ஆயுள்வேதத் திணைக்களத்தின் ஆயுள்வேத ஆணையாளர் ;

(ஈ) அமைச்சரினது அமைச்சின் பிரதான கணக்காளர் ; அத்துடன்

(உ) அமைச்சரினால் நியமிக்கப்படும் வேறு மூன்று உறுப்பினர்கள் ; இவர்கள் ஒவ்வொருவரும் (4) ஆம், (5) ஆம், (6) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சரினால் அவருக்கு வழங்கப்படும் நியமனக் கடிதத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

அமைச்சரால் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் இச்சட்டத்தில் " நியமன உறுப்பினர் " எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

(3) அமைச்சரினது அமைச்சின் செயலாளரே சபையின் தவிசாளராதல் வேண்டும். இவர் இதனகத்துப்பின்னர் " தவிசாளர் " எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

2—எ 53824—6,350 (12/80)

(4) அமைச்சரானவர், சபையின் எவரேனும் நியமன உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுவது உகந்ததெனக் கருதுவாரெனின், அவ்வாறு அகற்றுவதற்கான காரணம் எதுவும் காட்டாமலே, அத்தகைய நியமன உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள சபையின் உறுப்பினரொருவர், அத்தகைய உறுப்பினரொருவராக மீள நியமிக்கப்படுவதற்கோ அல்லது சபையில் வேறு ஏதேனும் தன்மையில் பணியாற்றுவதற்கோ தகவற்றவராதல் வேண்டும்.

(6) சபையின் நியமன உறுப்பினர் ஒருவர், அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான அறிவிப்புமூலம் எந்நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(7) தவிசாளர் அல்லது சபையின் எவரேனும் உறுப்பினர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்திற்காகத் தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின், அவரது இடத்திற் செயலாற்றவென வேறோர் ஆளை அமைச்சர் நியமிக்கலாம்.

(8) சபையின் நியமன உறுப்பினரொருவர், அவரது பதவிக்காலம் முடிவடையுமுன்னரே இறப்பின் மூலம், பதவி விலகல் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் தமது பதவியை வறிதாக்கினால், அவருக்குப் பின்னமைந்தவர், அவர் தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, தாம் எந்த ஆளைத் தொடர்ந்து பதவிக்கு வருகின்றாரோ அந்த ஆளின் பதவிக் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(9) சபையின் செயல் எதுவும் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருந்தது என்ற காரணத்திற்காக மட்டும், அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருந்தது என்ற காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றது எனக் கருதப்படுதலாகாது.

(10) சபை அதன் கூட்டங்கள் தொடர்பிலானதும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கையாளுதல் தொடர்பிலானதுமான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆக்கலாம்.

*சபையின் நியமன உறுப்பினர்களின் ஊதியம்.*

4. அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்திலும் அத்தகைய வீதங்களிலும் சபையின் நியமன உறுப்பினரொருவருக்கு ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

*நிதியத்தின் தத்துவங்கள்.*

5. (1) சபையானது நிதியத்தின் பெயரில் பின்வருவனவற்றைச் செய்யத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும் :—

(அ) அசைவுள்ள ஆதனமாயினுஞ்சரி, அசைவற்ற ஆதனமாயினுஞ்சரி, கொள்ளுதல், வைத்திருத்தல் அல்லது முகாமைசெய்தல்;

(ஆ) நிதியத்துக்கு உரித்தானதாக வந்தடையக்கூடிய அசைவுள்ள ஆதனம் எதையாயினுஞ்சரி, அசைவற்ற ஆதனம் எதையாயினுஞ்சரி, விற்றல், ஈடுவைத்தல், கொடுத்துமாற்றல் அல்லது வேறு வகையாகக் கையுதிர்த்தல் அல்லது கையாளுதல்;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமானவையாக இருக்கக்கூடிய அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் புரிதல்.

நிதியத்துக்கான கொடுப்பனவுகள்.

6. ஏழாம் பிரிவில் தரப்பட்டுள்ள எவையேனும் நோக்கங்களுக்காகத் தனிப்பட்ட தனியாட்களிடமிருந்தும், குழுமங்களிடமிருந்தும், இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள நிறுவனங்களிலிருந்தும் நன்கொடை என்ற வகையாக அல்லது கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நிதியத்தின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

நிதியத்தின் பணங்கள் என்ன நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம் என்பது.

7. நிதியத்துக்குச் சொந்தமான பணங்களை, அமைச்சரின் பணிப்புகளுக்கமைய, பின்வரும் எவையேனும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தல் சபையின் கடமையாதல் வேண்டும்:—

(அ) இலங்கையிலுள்ள சுகாதாரக் கவனிப்புச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களை அபிவிருத்தி செய்தலும் மேம்படுத்தலும்;

(ஆ) இலங்கையின் சுகாதாரக் கவனிப்புச் சேவைகளில் ஈடுபட்டுள்ள அல்லது அத்தகைய சேவைகளுடன் தொடர்புள்ள ஆட்களிடையே ஆராய்ச்சியை மேம்படுத்தலும், அத்துடன், அவர்களின் கல்வியையும் அறிவையும் முன்னேற்றுதலும்;

(இ) இலங்கைவாழ் மக்களிடையே நோய்த்தடுப்புக்கு அவசியமான நடபடிகளை அல்லது இலங்கை வாழ் மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு அவசியமான நடபடிகளை எடுக்கும் நோக்கத்துக்காக, எவையேனும் கருத்திட்டத்துக்கு நிதியுதவியளித்தல்; எவ்வாறாயினும், குறிப்பிட்டவொரு கருத்திட்டத்துக்கு நிதி உதவியளிக்கும் நோக்கத்துக்காக ஏதேனும் கொடை பெறப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய கொடையானது, குறிப்பிட்ட கருத்திட்டத்துக்கு நிதியுதவியளிப்பதற்காகவே சாத்தியமான அளவு பயன்படுத்தப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்;

(ஈ) இலங்கையிலுள்ள சுகாதாரக் கவனிப்புச் சேவைகளின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் மருத்துவ சாதனங்களையும் அத்தியாவசிய ஔடதங்களையும் கொள்வனவு செய்தல்.

நிதியத்தின் பணங்களை முதலீடுசெய்தல்.

8. அமைச்சரினால் விடுக்கப்படக்கூடிய அத்தகைய பணிப்புகளுக்கமைய, நிதியத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்கள், சபை தீர்மானிக்கக்கூடிய அத்தகைய விதமாக, சபையினால் முதலீடு செய்யப்படலாம்.

நிதியத்தின் அலுவலர்களும் சேவையாளர் களும்.

9. சபையானது அமைச்சரின் பணிப்புகளுக்கமைய, பின்வருவன வற்றைச் செய்யத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) நிதியத்தின் அலுவல்களை நிருவகிப்பதற்கும், முகாமை செய்வதற் கும் அவசியமாகக்கூடியவாறான நிதியத்தின் அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் ;

(ஆ) அவ்வாறு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கும் சேவையாளர் களுக்கும் கொடுக்கப்படற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித் தல் ;

(இ) அத்தகைய ஊதியங்களையும், நிதியத்தின் அலுவல்களை நிருவகிக் கும்போது உறப்படும் வேறு செலவுகளையும் நிதியத்தின் வரு மானத்திலிருந்து செலுத்துதல்.

கணக்கு களும் கணக்காய் வும்.

10. (1) சபையானது நிதியத்தின் வருமானம், செலவினம் ஆகியன பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருந்துவரச் செய்தல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதி, நிதியத்தின் கணக்குகளை ஒவ் வோராண்டும் கணக்காய்வு செய்தல் வேண்டும். அத்தகைய கணக்கு களைக் கணக்காய்வு செய்கையில் அவருக்குதவும் நோக்கத்துக்காக, கணக் காய்வாளர் தலைமையதிபதி, தகைமைபெற்ற எவரேனும் கணக்காய் வாளரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாமென்பதோடு, அத்தகைய கணக்காய்வாளர், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பணிப்பின்கீழும் கட்டுப்பாட்டின்கீழும் செயலாற்றுதலும் வேண்டும்.

(3) நிதியத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதில், அவரால் உறப்பட்ட செலவுகளைச் சமாளிக்கும் நோக்கத்துக்காக, சபை தீர்மானிக் கக்கூடியவாறான அத்தகைய ஊதியம், நிதியத்தின் வருமானத்திலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நிதியத்திலிருந்து பெறப்படும் ஊதியமெதுவும், அத்தகைய கணக்காய்வின் நோக்கத்துக்காக அவரால் வேலைக்கமர்த்தப்பட்ட எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளருக்கு அல்லது கணக்காய்வாளர்களுக்கு அவரால் செலுத்தப்பட்ட எவை யேனும் பணத்தொகைகளை அதிலிருந்து கழித்ததன்பின்னர், திரட்டு நிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி ஒவ்வோராண்டும் திசெம்பர் முப்பத்தோராம் தேதிக்குப் பின்னர், சாத்தியமான அளவு விரைவாக, நிதியத்தின் அந்த ஆண்டுக்கான அலுவல்களின் நிருவாகம் பற்றிய அறிக்கையொன்றையும், நிதியத்தின் வரவு செலவுக் கூற்றொன்றையும், அத்துடன், அந்த ஆண்டின்போது நிதியத்துக்குச் சொந்தமான பணங் களின் முதலீடு பற்றிய கூற்றொன்றையும் தயாரித்தல் வேண்டும்.

(5) இந்தப் பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்ற சொல்லமைப்பானது—

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்

புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருள்படும் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவிருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் என்று பொருள்படும்.

**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையும் கூற்றும் பாராளுமன்றத்தின் முன்னர் வைக்கப்படுதல்.**

11. கணக்காய்வாளர் தலைமையதிபதி, 10 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவைப் பின்பற்றி, அவரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையையும் கூற்றையும் அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதோடு, அவ்வமைச்சர் அத்தகைய அறிக்கையையும் கூற்றையும் பாராளுமன்றத்தின் முன்னர் வைப்பித்தலும் வேண்டும்.

**நிதியாண்டு.**

12. நிதியத்தின் நோக்கத்துக்காக நிதியாண்டானது, சனவரி ஓராம் நாளன்று தொடங்குகிறதும், திசெம்பர் முப்பத்தோராம் நாள் முடிவடைகிறதுமான ஆண்டாதல் வேண்டும்.

**குறித்தசில தீர்வைகளிலிருந்தும் வரிகளிலிருந்தும் நிதியத்துக்கு விலக்களித்தல்.**

13. (1) நிதியத்தின் நோக்கங்களை முன்னேற்றுவதற்கு எவையேனும் பொருட்களை இறக்குமதிசெய்தல் உகந்ததெனக் கருதப்படின், அமைச்சர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், நிதியத்தினால் இறக்குமதி செய்யப்படும் அத்தகைய எவையேனும் பொருட்களின் மீதான சுங்கத் தீர்வையைச் செலுத்துவதினின்றும் நிதியத்துக்கு விலக்களிக்கலாம்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ், செலுத்தற்பாலதான ஏதேனும் வருமான வரியிலிருந்து அல்லது செல்வவரியிலிருந்து நிதியம் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(3) எவரேனுமாள், நிதியத்துக்கு நன்கொடையொன்றை அளிக்குமிடத்து, அந்த நன்கொடையின் மொத்தப் பெறுமதியின் அளவுக்கு, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் நன்கொடைவரி செலுத்துவதிலிருந்து அவர் விலக்களிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(4) எவரேனுமாள், நிதியத்துக்குக் கொடையொன்றை அளிக்குமிடத்து, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தகைய கொடையானது அங்கீகரிக்கப்பட்ட செலவினமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், கொடையளிப்பவர், அத்தகைய கொடையின் மொத்தப் பெறுமதி தொடர்பில் அச்சட்டத்தின்கீழ் நிவாரணத்துக்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(5) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், இப்பிரிவின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும்.

*நிதியத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல்.*

14. நிதியத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நிதியம் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.*

15. நிதியமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

ாளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ர 30; (வெளிநாடு) ரூபா 40; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் நும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ இல. 500, ாழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் சந்தாப்பணங்கள் டயத்தில் பணம் கட்டிய தேதிக்குப் பின் வெளியிடப்படும் சட்டமூலங்களும் சட்டங்களும் மாத்தி அனுப்பப்படும். அதற்கு முந்தியவை அனுப்பப்படமாட்டா என்ற நிபந்தனையின் பேரில் ஏற்றுக்கொள்ளப்படும்